REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 30உ வெள்ளி (13—7—56) ★ ★ வெளியூர்: ஆனி 31உ சனி (14—7—56) [இதழ் 25

சிங்கள வெறியின் விளைவு?

★

கொழும்பு, ஜூலை 12—

"மொழி ஆதிக்கத்தை எதிர்த்ததன் விளைவால், 87பேர் காயமடைந்தனர்; 43 கடைகள் சூறையாடப்பட்டன; நஷ்டம் எவ்வளவு என்று இன்னும் கணக்கிடப்படவில்லை", என்று இலங்கை பாராளுமன்றத்தில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், பிரதமர் பண்டாரநாயகா அறிவித்திருக்கிறார்.

மூன்று இலட்சம் நெசவாளர் வாழ்வு சரியும்

தமிழ்நாடு காங்கிரசிலிருந்து ஆச்சாரியார் விலகுவார்?

செத்துப்போன 'தட்சிணப் பிரதேச'த்திற்கு உயிரூட்ட நடவடிக்கையா?

சென்னை, ஜூலை 11—

தமிழ் நாடு காங்கிரசிலிருந்து ஆச்சாரியார் விலகுவாரா? —என்ற விவகாரம், இப்போது காங்கிரஸ் வட்டாரத்தில் பலமாக அடிபடுகிறது.

தட்சிணப் பிரதேச தகராறில், காங்கிரசார், கோஷ்டி சேர்த்துக் கொண்டு கூத்தாடுவதை, தமிழ் நாடு காங்கிரஸ் செயற் குழு கண்டித்திருப்பதை ஒட்டி, ஆச்சாரியாருக்கு, தொடர்ந்து தட்சிணப் பிரதேசம் பேசுவதா அல்லது தமிழ் நாடு காங்கிரசில் தொடர்ந்து நீடிப்பதா என்ற 'நெருக்கடி' ஏற்பட்டிருப்பதாயும் தெரிய வருகிறது.

செயற்குழுத் தீர்மானத்தை மீறி ஆச்சாரியார் 'தட்சிணப் பிரதேசம்', பேசினால், கட்சியிலிருந்து கல்தா கொடுக்கப்படும் என்று காமராசர் கோஷ்டியினரில் சிலர் வெளிப்படையாகவே கூறுவதாகவும் கூறப்படுகிறது.

தட்சிணப் பிரதேசம் என்ற திட்டம், பரந்த தேசீய நலன்களின் அடிப்படையில் எழுந்தது என்று அவர் கூறிவருவதால், தமிழ் நாடு காங்கிரசின் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு, தட்சிணப் பிரதேசம் பற்றி அவர் பேசாமலிருப்பார் எனக் கூறுவதற்கில்லை என்றும் தெரியவருகிறது.

கைநெசவுத் தொழில் செத்து மடியும்

விசைத்தறித் திணிப்பின் பயங்கர பலன்!

அம்பர் சர்க்கா நூலைக் கைத்தறி ஏற்றெடுத்தும் பார்க்காது

பஞ்சுக்கும் பெரும் நஷ்டம்! மக்கள் வாழ்வதும் கஷ்டம்!

இந்தியப் பேரரசின் சிறுபிள்ளைத்தனத்துக்குச் சூடு!

காஞ்சிபுரம், ஜூலை 12—

"கைநெசவுத் தொழிலில், 35,000 விசைத் தறிகளைத் திணிக்க மேற்கொள்ளும் முயற்சியின் விளைவாக, ஏறத்தாழ மூன்று இலட்சம் நெசவாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பலியாக்கப்படுவர்.

"அம்பர் சர்க்காவினுல் நூற்கப்படும் நூலைக் கைத்தறிகளுக்குப் பயன்படுத்த முடியாது. எனவே, அம்பர் சர்க்காவை நடைமுறைக்குக் கொண்டுவருவது, கைநெசவுத் தொழிலின் வளர்ச்சியைத் தடைப்படுத்தும் ஒன்றாகவே முடியும்.

"அம்பர் சர்க்காவில் குறிப்பிட்ட அளவு நூலை நூற்பதற்குத் தேவைப்படும் அதே அளவு பஞ்சைக் கொண்டு, மூன்று மடங்கு நூலை ஆலைகளில் உற்பத்தி செய்ய முடியும். பஞ்சுக்கு நாட்டில் குறைவு ஏற்படுகிறபோழுது இந்த முக்கியத்துவம் விளக்கமாகும்."

விசைத்தறித் திணிப்பினுல் விளையக்கூடிய பயங்கரமான பலன், அம்பர் சர்க்கா நூல் கைநெசவிற்கு பயன்படாமை, அம்பர் சர்க்காவினுல் பஞ்சு வகையில் ஏற்படுகிற பொருள் நஷ்டம் பற்றிய விளக்கம் கொண்ட மனு ஒன்று, டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரிடம், தமிழ் நாடு கைத்தறியாளர் சங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அம்மனுவில் மேற்கண்ட உண்மைகள் வலியுறுத்தப்பட்டிருப்பதுடன், மேலும் பின்வரும் நிலைமைகளும் விளக்கப்பட்டுள்ளன:—

"கைத்தறி ஒன்றுக்குக் குறைந்தபட்சம் ஒரு பொதி நூல்வீதம் இடையறாது தருவதாக இருந்தால், செயல்பட்டுவரும் 22,00,000 கைத்தறிகளும் 540 கோடி கெசம் துணிகளை உற்பத்தி செய்யக்கூடும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நூலுக்கு வேண்டிய சாயப் பொருட்களையும், தறிகளும் முதலீடாக வட்டியில்லாத கடன்களையும் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

"ஒவ்வொரு நெசவாளிக்கும் மாதம் 40 ரூபாய் ஊதியம் கிடைக்கும்படி சட்டமியற்ற வேண்டும். முதலீடு கைநெசவாளர்களைக் கொண்ட கூட்டுறவு விற்பனை சங்கங்களை உருவாக்க வேண்டும்.

"கைநெசவுத் துணிகளை வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்கும் அரசாங்கம் தீவிரமாக முயற்சிக்க வேண்டும்.

"பட்டு நெசவுத் தொழிலுக்கும், மேற்குறிப்பிட்டவகையில் உடனடியாக உதவி தேவைப்படுகிறது.

"கைத்தறிகளில் இன்றைக்குத் தேவைப்படும் 14,32,000 நூல் பொதிகளுக்குப் பதிலாக, 75,000 அம்பர் சர்க்காவினுல் உற்பத்தியாகும் நூல் மொத்தத்தில் 22,500 பொதியாகவே இருக்கும். கைத்தறிகளுக்கு மொத்தத்தில் 22,00,000 நூல் பொதிகள் தேவைப்படுகின்றன. இம் மொத்தத் தேவையில் 7,68,000 நூல் பொதிகளே ஆலைகளிலிருந்து கைத்தறிகளுக்குத் தரப்பட்டுவருகின்றன.

'வடநாட்டு எத்தர்களின் சதியை உலகறியச் செய்யவே தேர்தலில் ஈடுபடுகிறோம்'

சட்டசபை நுழைவு குறித்து தோழர் சம்பத் விளக்கம்

"அலுமினியம் உற்பத்திக்கு, சேலத்தில் கிடைக்கும் பாக்சைட் உதவுமா, உதவாதா என்ற விவாதக் கட்டத்தைக் கடந்து, 'உபயோகப்படும்' என்ற நடைமுறைக்கு வந்து ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகிறது.

"இப்போது பாக்சைட் கலந்த அந்த மண்ணை, டால்மியா என்ற வடநாட்டு முதலாளி வெட்டியெடுத்து இங்கிலாந்திற்கோ அமெரிக்காவிற்கோ அனுப்பிப் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறான்.

"இந்த நிலையில், 'அலுமினியம் தொழிற்சாலை அமைப்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்' என்று மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசுவது விந்தையாக இருக்கிறது.

"இதுநாள் வரை வாய்மூடிக் கொண்டிருந்துவிட்டு, தேர்தல் நெருங்கும்போது, திடீரென்று, 'எனக்கு சந்தோஷமாயிருக்கிறது; யோசனை பிறக்கிறது' என்று எவரேனும் பேசி அதனுல் மக்களை ஏமாற்றிவிட முடியாது.

"இந்த எத்தர்களுடைய சூதினை உலகத்தி[illegible]க்துக் காட்டத்தான்—அறிவிக்கத்தான். '[illegible]ப நுழைவு' என்ற தீர்மானத்திற்[illegible] வந்திருக்கிறது.

"[illegible] ஏன் இன்னும் விமோசனம் ஏற்படவில்லை: [illegible]யம்வலி நிலக்கரி, நமது பேரன்மார்கள் காலத்தில் தான் வெளிவருமா?

"சேலம் 'பாக்சைட்' வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருப்பானேன்? சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலை துவங்கினுல், ரூ. 10 கோடி வரையில் உதவுவதாக ரஷ்ய சர்க்கார் ஆயத்தம் தெரிவித்ததே, அது என்னவாயிற்று? இவை பற்றி டில்லியில் உள்ள 'பெரிய' மந்திரிகள் முதல் சென்னையில் உள்ள 'பேபி' மந்திரிகள் வரையில் வாயை மூடிக்கொண்டிருப்பதேன்?—என்பனபோன்றவையெல்லாம் சட்டசபையிலும், மக்கள் சபையிலும் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் அல்லவா? அதற்காக சட்டசபைக்குள் நுழையவேண்டுவது அவசியமல்லவா?

'வடநாட்டு எத்தர்களின் சூதினை உலகறியச் செய்வது எப்படி? உலகம் அறிந்துகொள்ளாமல் விடுதலை பெறுவது எப்படி?

"இன்றைய நிலையில் உலகின் ஏதாவது ஒரு மூலையில், அரசியல் நிலை, வேற்றுரு எடுக்கவேண்டுமானுல், உலகத்தின் அனுதாபம் இன்றி அது சாத்தியப்படாதே! இப்படி உலகத்தின் அனுதாபத்தைப் பெற சட்டமன்றங்களில் நமது கருத்துக்கள் எதிரொலித்தாலன்றி, வேறு வழி என்ன?

"காசு சம்பாதிப்பதற்காக நாம் சட்டசபையில் நுழையவிருக்கிறோம் என்று கூறுகிறார்களே, அவர்கள் இதை எல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டாமா?"

—என்று, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னை—ஆழ்வார்பேட்டை தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுக் கேட்டார். அவரது சொற்பொழிவின் இரு பகுதிகள் முன்னரே வெளிவந்துள்ளன; மற்றொரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

"தி. மு. கழகத்திடம் என்ன திட்டம் இருக்கிறது?—என்று காமராசர் கேட்டாராம்; அதனுடன், 'எங்களிடம் ஐந்தாண்டுத் திட்டம் இருக்கிறது; இவர்களிடம் என்ன இருக்கிறது?'—என்றும் கேலிபேசினாராம்!

"ஐந்தாண்டுத் திட்டம் பண்டித நேருவின் தந்தையான மோதிலால் நேருவின் 'எஸ்டேட்' வருமானத்திலிருந்து செலவு செய்து நிறைவேற்றப்படுவதில்லை; அந்தத் திட்டத்திற்கான செலவு முழுவதும், இந்த நாட்டு மக்களிடமிருந்து தட்டிப் பறிக்கப்படுகிறது [illegible]பதை மறந்துவிடுவத[illegible]

"இந்தத் தி[illegible]த ஆட்சியில் உள்ள[illegible]வர்களிஷ்டம்போல [illegible]ரும்பும் பிரதேசத்தின் [illegible]விருத்திக்காகவே பயன்படுத்திக்கொள்ள அதிகாரம் படைத்தவர்கள் அல்லர்!

"காமராசர், ஐந்தாண்டுத் திட்டத்தைத் தேர்தல் பிரச்சினையாக வைப்பார் என்றால், பிரச்சினையி[illegible], தி. மு. கழகமும் தேர்தலில் நிற்க முடியாது என்பதல்லவே!

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னாடு வஞ்சிக்கப்பட்ட வகைகள் குறித்து நாம் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறோம்.

"அப்போது காமராசர், தமிழ் நாடு காங்கிரசின் தலைவராயிருந்த நேரம்; ஒரு முறை கூறினார்—'ஐந்தாண்டுத் திட்டத்தில், எல்லாம் வடநாட்டிலேயே என்று பேசுகிறார்கள்; ஆனால் பெரிய பெரிய ஆறுகள் எல்லாம் வடநாட்டில்தானே இருக்கின்றன? அவ்வாறிருக்க, இங்கே அணைக்கட்டுகள் கட்டவில்லை என்று கூறுவது என்ன நியாயம்?'—என்று பேசினார்.

"நாம் அப்போது, தமிழ் நாட்டில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு உட்படாத ஆறுகளையும் குறிப்பிட்டுக்கூறி, 'ஐந்தாண்டுத் திட்டம் என்பது வெறும் நீர்ப்பாசனத் திட்டம் அல்ல; ஐந்தாண்டுத் திட்டத்தின் பல தலைப்புகளில் நீர்ப்பாசனத் திட்டங்கள் என்பதும் ஒன்று' என்பதையும் விளக்கிக் கூறினோம்."

(இந்த இடத்தில் தோழர் சம்பத் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னாட்டில் நிறைவேற்றப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களின் விபரங்களையும், வடநாட்டுத் திட்டங்களின் விபரங்களையும் புள்ளி விபரங்களுடன் எடுத்துரைத்து, வடநாடு மட்டுமே வாழவும் தென்னாடு தேயவுமான நிலைக்கே திட்டம் பயன்பட்டது என்பதை விளக்கினார்)

"பொதுவாக, அபிவிருத்தியைப் பொறுத்த மட்டில், நாம் பகிரங்கமாகவே குற்றஞ் சாட்டுகிறோம்.

"சதிகாரர்கள் ஒன்றுகூடி, ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரில் வடநாட்டைச் சோலையாகவும், தென்னாட்டை நிரந்தரமான விவசாயக் காடாக வைத்திருக்கவும் சதி செய்திருக்கிறார்கள்,' என்று நாம் குற்றஞ் சாட்டியிருக்கிறோம்.

"இந்தக் குற்றச் சாட்டை எழுப்பிய நேரத்தில், 'விஷமிகள்', 'விபரமறியாதவர்கள்' என்று நம்மைக் கேலி பேசினார்கள்.

சென்னை நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம் திருச்சியில் பேசுகையில், 'அதிகாரபூர்வமாகவே கூறுகிறேன்; ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை' என்று கூறியது; அவ

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 13—7—'56 வெள்ளி

மூன்று நன்மைகள்!

இந்தி மொழியின் நிச்சயமான தாக்குதலிலிருந்து தமிழ் மொழியைப் பாதுகாத்து வளர்க்க முடியும்.

நமது மக்களின் நல்வாழ்விற்காக இப்பகுதியில் இருக்கும் இயற்கை வளங்களைப் பயன்படுத்த முடியும்.

அனைத்திந்திய ஆட்சி அமைப்புகளில், தனக்குரிய நியாயமான மதிப்பையும் செல்வாக்கையும் தொடர்ந்து தெற்கினால் செலுத்தி வருவது சாத்தியமாகும்.

இம்மூன்று 'உயரிய' காரணங்களைக் காட்டி இரு மொழி அமைப்பான தட்சிணப் பிரதேச அமைப்பு ஏற்பாட்டை வலியுறுத்துகிறார் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.

தட்சிணப் பிரதேச அமைப்பை ஏற்படுத்த வேண்டியதற்குரிய வெளிப்படை காரணங்களாக, இம்மூன்றையும் இராஜகோபாலாச்சாரியார் சுட்டிக்காட்டுகிறார்.

இம்மூன்றையும் தவிர்த்து, வெளிப்படையாகக் கூற முடியாத வேறு சில காரணங்களும் ஆச்சாரியாரின் உள்ளத்தில் ஒளிந்துகொண்டு இருக்கக் கூடும்.

அவர் வெளிப்படையாகக் கூருது விடுத்தவற்றைக் கண்டறிந்து வெளிப்படுத்துவதற்கு முன், அவர் வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ள மூன்று காரணங்களில் பொதிந்து கிடக்கும் நியாயாநியாயங்களை ஆராய்வோம்.

இந்தி மொழியின் நிச்சயமான தாக்குதலிலிருந்து தமிழைப் பாதுகாத்து வளர்க்க, முதற்கண் மலையாள மொழிப் பகுதியும் தமிழ் நாடும் இணைய வேண்டியது அவசியம் என்கிருர் ஆச்சாரியார்.

அதே ஆச்சாரியார், எப்படியும் இந்தி மொழியைத் திணிப்பது என்ற முடிவுடன் இந்தியப்பேரரசு இருந்துவருவதாகத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிருர். அதுவுமன்றி, அம்முடிவை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குரிய பெரும் பலமும் இந்தியப் பேரரசிற்கு இருக்கிறது எனவும் அவர் அழுத்தம் திருத்தமாக உரைக்கிருர்.

பெரும்பலம் படைத்த ஒரு ஆட்சி, சட்டத்தின் பெயரைக் கூறிக்கொண்டு தனது பிடிவாதத்தை நிறைவேற்ற முன் வருமபொழுது, அதுவும தனக்கு எல்லா வகையிலும் சட்டப்படி கட்டுப்பட்டுத் திரவேண்டிய நிலையில் இருக்கும் ஒருஆட்சியின்மீது திணிக்க முன்வருமபொழுது, அப்பிடிவாதத் திணிப்பை, ஆட்சி நிலையில் எதிர்ப்பது என்பது வெற்றி பெற முடியாதது என்பதுடன் பொருளற்றக் கேலிக்கூத்துமாகும்.

அடங்கி இருக்க வேண்டிய நிலையில் உள்ள ஆட்சிஅமைப்பு, நிலப்பரப்பில் பெரிதாக இருப்பதும் சிறிதாக இருப்பதும், மக்கள் தொகையில் கூடுதலாக இருப்பதும் குறைவாக இருப்பதும், அதற்கு இயல்பாக உள்ள எதிர்ப்பு சக்தியை அல்லது அதிகாரத்தைப் பெருக்குவதற்கு ஒருக்காலும் பயன்படப் போவது கிடையாது.

சட்ட நிபுணர் என்ற புகழ் பெற்றுள்ள ஆச்சாரியார் போன்றவர்கள், எல்லா வகையிலும் சட்டப்படி கீழ்ப்படிந்து நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்ற மாகாண ஆட்சி அமைப்பு, இந்தியப் பேரரசின் இந்தித் திணிப்பை, குறிப்பிட்ட மாகாணத்தின் எல்லையை அகலப்படுத்துவதின் மூலம் எதிர்த்து நிற்கமுடியும் எனப் பேசுவது, வெறும் வடிகட்டின பிதற்றலேயாகும். ஏதோ தாம் நினைத்த ஒன்றை வெளிப்படையாகக் கூறமுடியாத தனது நெஞ்சில் மறைத்து வைத்துள்ள ஒரு நயவஞ்சகத்தை, வெற்றிகரமாகச் சாதித்துக் கொள்ளுவதற்கே, இவ்வாறு போலியாகக் கூறப்படுகிறது என்றுதான் அறிவுடையோர் கொள்ளுவர்.

தமிழ் மாநிலம் தனித்து வாழ்ந்தாலாவது, மாகாண நிலையில் பற்பலத் துறைகளிலும் ஆட்சி மொழியாக இடம் பெறும் வாய்ப்பினைப் பெற்று, வாழ்வதற்கும், வளர்வதற்கும் தன்னைத் தகுதியுடையதாக ஆக்கிக்கொள்ளத் தமிழ் மொழியால் முடியும்.

இத்தமிழ் வளர்க்கும் சிறந்த முறையை விட்டுவிட வேண்டுகிருர் ஆச்சாரியார்!

தன்னை வளர்த்துக்கொள்வதற்கு இதைவிட வேறு ஒரு சிறந்த மார்க்கம், இந்த அரசியல் சூழ்நிலையில் கிடையாது என்ற உண்மையை ஆச்சாரியார் அறியாதவரல்ல.

உண்மையை அறிந்திருந்தும், பெரும் பலம்கொண்டு தாக்க வரும் இந்தி மொழியை எதிர்த்து நின்று, தான் வளர தமிழ் மொழி, மலையாள மொழியுடன் இணையவேண்டும் என ஆச்சாரியார் வாதிடுவது, எழுந்த பகைகளுக்கெல்லாம தப்பிப் பிழைத்து என்றும சீரிளமை குன்ருது இருக்கும இனிமைத் தமிழை, மிக இலகுவிலும அதிவிரைவிலுமசீரழிந்துவிடுவதறகுக் கூறும் சதியாலோசனை என்றுதான்கொள்ள வேண்டியதாக இருககிறது.

அந்தகோ! குறிப்பிட்ட ஒரு சாதிக்கு எதிர்காலததில் பாதுகாப்புத தேடித் தருவதற்காகவா, தமிழ் மொழியை அழிக்கும் பாதகச் செயலை ஆச்சாரியார் மனம விரும்பி மேற்கொள்ள முன்வர வேண்டும?

தமிழ் நிலமும், மலையாள பூமியும ஒன்றுபடுவதினுல் தமிழ் மொழிககு எவ்வகையில் புதிய ஆககம ஏற்படும என்பது, ஆச்சாரியார் கூறறிலிருந்து விளங்கிக்கொள்ளக் கூடியதாக இல்லை.

இந்தித் திணிப்பை எதிர்த்து நிறக, தனித்து வாழ்வதினுல் தமிழுக்கு இல்லாத பலம, மலையாள மொழியுடன் இணைவதினுல் எவ்வாறு பெருகக் கூடும என்ற நியாயத்தையும், ஆச்சாரியார் பேச்சிலிருந்து தெரிந்துகொள்வதற்கு நம்மால் முடியவில்லை.

எனவே, இந்தியின் நிச்சயமான தாக்குதலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டு வளர தமிழ் மொழிக்கு மலையாள மொழியின் கூட்டுறவு வேண்டும—அதாவது, தட்சிணப் பிரதேச அமைப்பு உருவாக வேண்டும் என்னும ஆச்சாரியாரின் வாதத்தில், தமிழ் மொழியின் அழிவுக்கான நச்சு நிலை இருக்கிறதே அல்லாது, நல்வாழ்வுக்கான ஏற்பாடு துளியும இல்லை என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

டில்லிப் பெரிய மனிதர்களின் கீழ்த்தரமான வஞ்சக நோக்கம்!

இந்தித் திணிப்பிற்கான நடவடிக்கைகள் தீவிரம்!

இந்தியைப் 'பரப்ப' விசேட அதிகாரிகளாம்

இந்தி வழங்காத மாநிலங்களில் இந்தி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியாம்

புதுடில்லி, ஜூலை 11—

'இந்தியைத் திணிக்க மாட்டோம்—புகுத்த மாட்டோம்' என்று 'பெரிய மனிதர்'கள் வழங்கும் உறுதி மொழிகள் கீழ்த்தரமான வஞ்சக நோக்குடையவை என்பதை இந்தியைப் பரப்புவதற்காக என்றுகூறி அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

இந்தியைப் பரப்புவது என்ற பெயரில் அவர்கள் பல கோடி ரூபாய் செலவில் மேற்கொண்டுவரும் புதுப் புது நடைமுறைகள் நாளுக்கு நாள் விரிவாகி வருகின்றன.

இன்று புதிதாக சில யோசனைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன:—

டில்லி பேரரசில் கல்வி இலாகா 'இந்தி சிட்சா சமிதி' என்ற ஒன்றை நிறுவியுள்ளது.

அந்த சமிதியினர்தான் இந்த புதிய யோசனைகளின் கர்த்தாக்கள்!

இந்தி வழங்காத ஒவ்வொரு மாநிலத்திலும், இந்தியைப் பரப்புவதற்காக (புகுத்துவதற்காக) சர்க்கார் செலவில் ஒரு விசேட அதிகாரியை நியமிக்க வேண்டுமாம்.

இரண்டாவதாக, இந்தி வழங்காத பிரதேசங்கள் ஒவ்வொன்றிலும், இந்தி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் நிறுவ வேண்டுமாம்.

மூன்ருவதாக, இப்போது வசதியில்லாத பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றிலும், எம். ஏ. பட்டப் படிப்புவரை இந்தி சற்றுக்கொடுப்பதற்கான வசதியை அளிக்கும் பொருட்டு, பல்கலைக் சழகங்கள் அத்தனையும் இந்தி இலாகா ஒன்று துவங்குமாறு, பல்கலைக் சழக மானியம் வழங்கும் குழு கேட்டுக்கொள்ள வேண்டுமாம்!

எப்படி யோசனைகள்! இந்த யோசனைகளும் அமுல் செய்யப்படும் எனபதற்குச் சந்தேகம் தேவையில்லை அல்லவா?

எண்ணிக்கை தருகின்றனர்!

நியூயார்க், ஜூலை 12—

1955—56-ல, கல்வி நோக்கங்களுக்காக மற்ற நாடுகளிலிருந்து 43,000 பேருக்கு அதிகமானவர்கள் அமெரிக்காவுக்கு வந்துள்ளனர் என்றும், இதே நோக்கங்களோடு 10,700-க்கு அதிகமான அமெரிக்கர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்றும் சர்வதேசக் கல்வி நிறுவனம் தெரிவிக்கின்றது

சர்க்காருக்கு எதிராக தியாகிகள் நடவடிக்கை

தேர்தலில் போட்டியிட முடிவு

சென்னை, ஜூலை 11—

அரசியல் தியாகிகள் சார்பில், வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட சில அபேட்சகர்களை நிறுத்துவதென முடிவாகியிருப்பதாக எம். கருப்பையா, ஏ. டி. பக்தவத்சலம் ஆகியோர் அறிவித்திருக்கின்றனராம்.

பிரதம மந்திரி, காங்கிரஸ் தலைவர் தேபர், முதன் மந்திரி காமராசர் ஆகியோரிடமெல்லாம் முறையிட்டும்கூட, சர்க்கார், தங்கள் கோரிக்கைபற்றிக் கவனிக்கவில்லை என்பதாலேயே தியாகிகள் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர்கள் கூறினராம்.

அமெரிக்காவில் வேலை ... தார் எண்ணிக்கை!

உயர்ந்திரு- ... தகவல்

வாஷிங்டன், ...

அமெரிக்காவில் வேலை வோரின் எண்ணிக்கை கடந்த மாதம் 6 65,03,000 ஆக உயர்ந்திருககிறதாம!

ஜூன் மாதத்தில் வேலை செய்தவாகளின் மொத்த எண்ணிக்கை 6,40,16,000 என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது

ஜுன் மாதத்தில் வேலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்தலில் பெரும் பகுதி விவசாயத் துறையில்தானும்! 1956 மே மாதத்தில 71,46,000 ஆக இருந்தது 1956 ஜுன் மாதத்தில 78,76,000 ஆக உயாந்ததாம்!

பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்

ஆந்திர கவர்னர் பிரகடனம்

நிலத்திலிருந்து விவசாயிகளை வெளியேற்ருமலிருக்க நடவடிக்கை

கர்னூல், ஜூலை 11—

நிலச் சீர்திருத்தக் குழு தனது அறிக்கையைத் தந்ததைத் தொடர்ந்து, விவசாயத்திலீடுபட்டிருக்கும் பண்ணையாட்களை அநியாயமாக நிலத்திலிருந்து வெளியேற்றுவதைத் தடுப்பதற்காக, ஆந்திர மாநில கவர்னர், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் ஒன்றைப் பிரகடனம் செய்திருக்கிருர்.

நிலச் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசுகள் சர்க்காரின் தீவிர பரிசீலனையிலிருக்கின்றன. இந்தச் சிபாரிசுகள் சட்டமாக்கப்படக்கூடும் என்று அறிந்து, விவசாயத்திலீடுபட்டிருக்கும் பண்ணையாட்களை நிலப் பிரபுக்கள் வெளியேற்ருமலிருப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் என்று, சர்க்கார் தெரிவித்திருககிறது.

சபை இப்போது நடை... ...தலால்தான் கவர்னர் சட்ட... ...டனம் செய்திருக்கிருர என்று கூ...

செயற்கை அரிசி உற்பத்தி

ஆகஸ்டு முதல் துவங்குகிறது

மைசூர், ஜூலை 12—

'செயற்கை அரிசி' உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்கள், இங்குள்ள மத்திய உணவு நுணுக்க ஆராயச்சிக் கழகத்தில் நிறுவப் பட்டிருககிறது

கிழக்கு ஆசியாவிலேயே முதல் செயற்கை அரிசி உற்பத்திச்சாலையான இது, ஆக 1-ந் தேதி முதல் உற்பத்தியைத துவக்கும்

நாள்தோறும் 6 மணி நேரம் பணியாற்றி சுமார் ஒரு டன் அரிசியை இந்தத் தொழிற்சாலை உற்பத்தி செய்யும்.

செயற்கை அரிசியைத் தவிர, மலிவான போஷாக்கு சத்துள்ள 'மைசூர் மாவு'ம் இங்கு உற்பத்தியாகும்; இதில், முக்கால் பங்கு மரவள்ளிக் கிழங்கு மாவும், கால் பங்கு மணிலாக் கொட்டை மாவும் சேர்ந்திருக்கும்.

விவசாயிகளுக்கு வசதி தேடித் தர!

கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியப் பணியாற்றும்

சென்னை, ஜூலை 12—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டில், சென்னை மாநிலத்தில், 100 பெரிய கூட்டுறவுச் சங்கங்களைத் துவககுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிககப்பட்டுள்ளது.

மேலும், இம்மாதிரியான 150 சங்கங்கள் 1957—58-ம் ஆண்டிப் ...கப்படுமெனவும் குறிப்பிடப் பட்டுள்ள

ஐந்து அ... ...கிராமங்களைக் கொண்டதாக இந்தக் கூட்டுறவுச் சங்கம் இருக்கும்; கடன் வசதிகளை விவசாயிகளுக்கு அளிப்பதும், அறுவடைப் பயிர்களுக்கு 'மார்க்கெட்' வசதிகளைத் தேடித் தருவதும் இவைகளின் முக்கிய வேலையாக இருக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் புயல் நிவாரணம்

புயல்—புனலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மொத்தத்தில் ரூ. 84,78,095 கடனுதவியாக அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

ரூ. 6,67 700 செலவில், பாதிக்கப்பட்ட கிராமங்களில் வீடுகள் கட்டித் தருவதற்கு உத்தேசிக்கப் பட்டிருக்கிறதாம்

கும்பகோணம், பாபநாசம் தாலுகாக்களில், 1955 ஜுன் மாதம் குறுகிய காலத் தவணையில் ரூ. 40 550 தரப்பட்டிருப்பதாகவும், கிராம வீடு கட்டுவதற்கான திட்டத்தின்படி ரூ 16,900 அளிக்கப் பட்டிருப்பதாகவும் கலெக்டர் கூறியுள்ளார்.

கழகச் செய்திகள்

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகப் பொதுக் குழு

22, 23-6-56 இரு நாட்களில், நாகர்கோவில் மீனாட்சிபுரம் லெட்சுமி தியேட்டரில் நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக நிதிக்காக நடிக மன்னன் எஸ் எஸ் இராசேந்திரன் குழுவினரால் நடத்தப்பெற்ற 'மணி மகுடம்' 'புதுவெள்ளம்' நாடகங்களின் வரவு—செலவினங்கள் 6-7-56-ல் வடசேரியில் நடைபெற்ற நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகப் பொதுக் குழுவில் பரிசீலனை செய்யப்பட்டு, இரண்டு நாட்களிலும் நாடக டிக்கட்டுகள் மூலம் வரவு ரூ 4081-12-0; அதில் செலவினங்கள் ரூ. 3591-13-0 நீக்கி, இருப்பு ரூ 489-15-0 என்ற வரவு-செலவுகளைப் பொதுக் குழு ஒத்துக் கொண்டது.

கீழப்பாவூர் தி. மு. கழகம்

1—7—56 இரவு 8 மணியளவில், கீழப்பாவூர் தி. மு கழகச் செயற்குழுக் கூட்டம் செயலாளர் தோழர் ஏ. இராமநாதன் தலைமையில் நடைபெற்றபோது கழகத்தின் எட்டாவது ஆண்டுத் துவக்க விழாவை செப்டம்பர் 17, 18 ஆகிய நாட்களில் நடத்துவதென்றும், கீழப்பாவூர் கிராம அபிவிருத்திக் கமிட்டிக்கு கழகப் பிரதிநிதிகளாக தோழர்கள் பி ஆர். சிவன், ஜே பி மணி பி ஆர் வைகுண்டம், வி மா. முத்தரசு, எஸ் இலக்குமணன், எஸ் ஐயக்கண்ணு, ஏ. இராமநாதன் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தும், மாநில மாநாட்டுத் தீர்மானங்களைப் பொதுவாக வரவேற்றும் தீர்மானங்கள் நிறைவேறியது.

வத்தலகுண்டு தி.மு.கழகம்

8—7—56 மாலை 3 மணிக்கு, படிப்பகத்தில் வத்தலக்குண்டு தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் இளமதி தலைமையில் நடைபெற்றபோது தி மு. கழகத் தேர்தல் நிதிக்காக 'மணிமகுடம்' நாடகம் நடத்துவதெனவும், இலங்கைத் தமிழர்களை சிங்கள வெறியர்கள் படுகொலை செய்ததை வன்மையாகக் கண்டிப்பதுடன், தமிழுக்கு சமஉரிமை கொடுக்க இலங்கை பண்டாரநாயகா மந்திரி சபையைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சின்னத்தம்பிபாளையம் தி. மு. க. கிளை துவக்கம்

6—7—56ல் சின்னத்தம்பிபாளையத்தில் தி. மு கழகக் கிளை துவக்க விழாவும், பொதுக்கூட்டமும் தோழர் பி சின்... ...யில் நடை... தோழர்கள் வி. ரத்தினவேலு, அ நடேசு, வி பி இராசவேல், டி எல். தங்கவேல் ஆகியோர் கழகத்தின் இலட்சியம் பற்றியும், பொதுத் தேர்தலில் நமது பணி பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

பிளாக்பள்ளி —பெங்களூர் தி. மு. கழகம்

1—7—56ல், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ஆர். கோபாலன்: துணைச்செயலாளர்: திராவிடமணி; பொருளாளர்: பழம்நீ அரங்கண்ணல்; பொறுப்பாளர்: ம. பாலன்.

செங்கற்பட்டு தி. மு. கழகம்

-7-56 காலை 9 மணியளவில் செங்கற்பட்டு கணபதி டாக்கீசில், தி மு கழகப் படிப்பக நிதிக்காக ஓர் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. தோழர் ஈ. வெ கி சம்பத் அவர்கள் 'விடுதலை விழா' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார்கள்.

அம்மாப்பேட்டை தி. மு. கழக ஆண்டுவிழா

8-7-56-ல், அம்மாப்பேட்டை (தஞ்சை) தி மு கழக ஏழாவது ஆண்டுவிழா, தோழர் எஸ் எம். பக்கிரிசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம் எஸ் மணி, மு கருணாநிதி மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். தோழர் ஏ. கே. கோவிந்தராசன் நன்றி நவின்றார்.

அய்மையநாயக்கனூர் தி. மு. கழகம்

8—7—56 இரவு 10 மணிக்குக் கழகக் கட்டிடத்தில், தோழர் பவுன் முத்துச்சாமி தலைமையில் கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. தோழர் கந்தசாமியின் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டும், தோழர் கலியாணசுந்தரத்தை துணைச்செயலாளராகவும், தோழர் இரா அ பரமசிவத்தை மாவட்டப் பிரதிநிதியாகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் அழகிரிசாமி, சோ. பாலசுப்பிரமணியம் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

குழந்தையைக் காக்க விரைந்த அன்னை

படுகாயமுற்று உயிர் துறந்த பரிதாபச் சம்பவம்

சிமோகா, ஜூலை 11—

ஓடிக்கொண்டிருந்த லாரியிலிருந்து வீழ்ந்துவிட்ட தன் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக, ஓடிய அதே லாரியிலிருந்து கீழே குதித்த அக்குழந்தையின் அன்னை, படுகாயமுற்று, அந்த இடத்திலேயே உயிர் துறந்துள்ள பரிதாபச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது

தன் கணவருடன் லாரியில் வந்துகொண்டிருந்த அப்பெண்மணி, தன் மூன்று குழந்தைகளுடன் லாரியின் பின்புறத்தில் உட்கார்ந்திருந்தாராம்; திடீரென லாரியின் பின்புறக் கதவு திறந்துவிடவே, 10 வயதுக் குழந்தையொன்று கீழே விழுந்துவிட்டதாம்; இதைக்கண்ட குழந்தையின் தாய், ஓடும் லாரியிலிருந்து வெளியே குதித்து குழந்தையைக் காப்பாற்ற முயற்சித்தாராம்;

இராமநாதபுரம் டிவிஷனல் எஞ்சினியர் டி. ஆர். சுந்தரம் என்பார், கைத்தறி செசவாளர்கள் குடியிருப்புத் திட்டங்களைப் பரிசீலனை செய்வதற்கான அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

செய்திச் சுருள்

★

செங்கற்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளன மாநாடு

ஒரு வேண்டுகோள்

29—7—56-ல், காஞ்சீபுரத்தில் நடைபெறப்போகும் மேற்படி மாநாட்டிற்கு, இயக்கத் தோழர்கள் தீர்மானங்களோ, மற்றெவ்விதத் தகவல்களோ அனுப்புவதானால் 'மாநாடு அலுவலகம், 26-ஏ, மதங்கீஸ்வரன் கோயில்தெரு, (மிஷன் ஆஸ்பத்திரி எதிரில்)' என்ற முகவரிக்கு அனுப்புமாறும், மாநாடு அலுவலகத்தில் 15-7-56 காலை 10 மணிக்கு நடைபெறும் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டு மேற்படி சம்மேளனச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்திந்திய அஞ்சல் ஊழியர் சங்கம்

30-6-56-ல் சென்னை மத்திய அஞ்சல் நிலையக்கட்டிடப் பகுதியில் இரண்டாவது வருடாந்திர பொது உறுப்பினர் கூட்டம் தோழர் சி. எம். நமசிவாயம் தலைமையில் நடைபெற்றபோது தோழர் சி. அருணாசலம் அவர்களைத் தலைவராகக்கொண்ட குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

விருதுநகர் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

8—7—56 காலை 10-30 மணியளவில், மன்ற 11-வது சொற்போர் அரங்கு திரு. எஸ். இராமர் தலைமையில் நடைபெற்றது. 'பூமிதானக் கொள்கை நம் நாட்டிற்குத் தேவை' என்ற பொருள் பற்றிய சொற்போரில் பல தோழர்கள் பேசினர்.

சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றத் திறப்பு விழா

8—7—56 மாலை 6 மணியளவில், சென்னை இராயபுரம், பனைமரத் தொட்டியிலுள்ள மேற்படி மன்ற அறையில், தோழர் க. குப்புராசு தலைமையில் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர் மு. த. இளஞ்சேரன் மன்றக் குறிக்கோள் குறித்தும், தோழர் தி. க மதிவாணன் தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்தும் பேசியபின், தோழர் க சிவரத்தினம் அவர்கள், சிங்காரவேலர் வாழ்க்கை வரலாறு குறித்தும், மன்றம் ஆற்ற வேண்டியப் பணிகள் குறித்தும் சொற்பொழிவாற்றி, மன்றப் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.

காரைக்குடி வள்ளுவர் படிப்பகம்

6—7—56 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு, மேற்படி படிப்பகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, 12—8—56ல், ஆண்டு விழாவை நடத்துவதென்றும், மற்றும் சில முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை-வண்ணை இளைஞர் முன்னேற்ற மன்றம்

8—7—56 காலை 9 மணிக்கு மன்ற இல்லத்தில், தோழர் டி. வீ. ராமன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டதுடன், மன்றச் சார்பில் விரைவில் பொதுக்கூட்டமொன்று நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன், தோழர் ஜி. கணேசன் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மணி அரசு மாணவர் மன்ற ஆண்டு விழா

8—7—56ல், வட சென்னையில் சபாநாயகர் சிவ-சண்முகம் மாணவர் இல்லத்தின்கண் நடைபெறும் மணி அரசு மாணவர் மன்றத்தின் இரண்டாம் ஆண்டுத் துவக்க விழா திரு. ஆல்பிரட் ஜே. பாக்கியநாதன் தலைமையில், திரு. பு. செல்வராசனார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. திரு. எஸ். ஏ. இராமசந்தர் அனைவரையும் வரவேற்றார். திரு. பு. செல்வராசனார், எம். ஏழுமலை, க. நாராயணசாமி ஆகியோர் உரையாற்றினர். எஸ். பரமானந்தம் அவர்களால் 'நல்ல மாணவன்' என்னும் ஓரங்க நாடகம் நடத்தப்பட்டது.

ஆரணி-சேவூர் (வ. ஆ.) அழகிரி மன்றம்

9—7—56 இரவு 8 மணிக்கு தோழர் எஸ் ஏ. கைலாசன் இல்லத்தில், சேவூர் (வ. ஆ) அழகிரி மன்ற அமைப்புக்கூட்டம் தோழர் ஏ. கே. குமாரவேலன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இராதாகிருஷ்ணன், எம். ஏ. செயராமன், எஸ். ஜி. கோபால், மு. சோமசுந்தரம், எஸ். ஏ. கைலாசன் ஆகியோர் மன்றத்தின் நோக்கமும்—பணியும் குறித்துப் பேசியபின் நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது:—செயலாளர்: எஸ். ஏ. கைலாசன்; துணைச்செயலாளர்: ஏ. கே. குமாரவேலன்; பொருளாளர்: என். ஏ. செயராமன்; மற்றும் 9 பேர் செயற்குழுஉறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இலக்கியச் சொற்பொழி

8—7—56 காலை 10 மணியளவில், பனைமரத் தொட்டி, அட்டபாளையம் பசனைகோயிலில் ஓர் இலக்கிய சொற்பொழிவுக் கூட்டம் தோழர் அ. முனுசுவாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். ஜி. விநாயகமூர்த்தி 'திட்டமிடுதல்' என்ற பொருளிலும், தோழர் சாமிசிதம்பரனார், 'இலக்கியத்தில் கருத்துப் புரட்சி' என்ற தலைப்பிலும் பேசினர். இலங்கைத் தமிழர் நிலை குறித்துத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

கீப்புபாவூர் மறுமலர்ச்சி நாடக மன்றம்

1-7-56 இரவு 9 மணியளவில் மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் முத்தரசு தலைமையில் நடைபெற்றபோது கழக ஆண்டுவிழாவில், 'திறப்பு விழா' 'குற்றவாளி' என்ற இரு நாடகங்களையும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அன்பளிப்பு

எஸ். வாலாவெட்டி தோழர் எம். இரத்தினம் அவர்கள் 'நம் நாடு' வளர்ச்சிக்காக அன்பளிப்பாகத் தந்த ரூ. 1 வரப்பெற்றோம்—நன்றி—நிர்வாகி.

திருமணம்

9—7—56ல், அத்தக்குடியில் நடைபெற்ற தோழர் பி. வி. ஆர். பாண்டியன்—தோழியர் சரோஜா திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—நிர்வாகி.

அகதிகளின் திமிரான போக்கினை!

கண்ணீர்ப்புகைக் குண்டுகளால் போலீசார் அடக்கினராம்

கல்கத்தா, ஜூலை 11—

ஐந்து பேருக்கு மேல் கூடக்கூடாதெனத் தடை விதிக்கப்பட்டிருக்கும் சட்டசபைப் பிரதேசத்தில், சுமார் 200 பேர் கொண்ட அகதிக் கூட்டம் ஒன்றின் மீது போலீசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர் என்று தெரியவருகிறது.

இந்த அகதிகள் நடைபாதைகளில் வசிக்கின்றனராம். இவர்கள், மத்திய அகதி புனரமைப்பு இலாகா மந்திரி மேகர் சந்த் கன்னாவின் இல்லத்திற்குச் சென்று திரும்பும்போது தடை விதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் கூட்டமாக நுழைந்தனராம். தடையுத்தரவை காரணமாகக் காட்டிப் போலீசார் அவர்களைக் கலைந்து செல்லுமாறு கேட்டனராம். திமிர் கொண்ட அகதிகள், போலீசார் கூறியதைக் கேட்க மறுத்ததுடன் போலீசாரைக் கல்கொண்டு தாக்கியிருக்கின்றனர். அதன் விளைவாக போலீசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர் என்றும் எவருக்கும் காயம் ஏதும் இல்லை என்றும் கூறப்படுகிறது

போலீசார் ஏழு பேர்களைக் கைது செய்தனராம்.

பால் பவுடர் உற்பத்தி

அயல் நாடுகள் தரும் உதவி

புதுடில்லி, ஜூலை 12—

இந்தியாவில் பால் பவுடர் உபயோகத்தை அதிகரிக்கவும், பரவலாக்கவும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது; இத்திட்ட...ன் கீழ், சென்னையிலும் ...தாவிலும் பதப்படுத்... பால் உற்பத்தி ... ...தொழிற்சாலைகள் ...படும்.

ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, நெதர்லாந்து, நியூசிலாந்து ஆகிய நாடுகள் மொத்தமாக 5,04,000 டாலர்களை இத்திட்டத்திற்காக உதவுகின்றன; இதில் 4,90,000 டாலர் பெறுமான உதவி கல்கத்தாவுக்கும் மீதி 14,000 டாலர் (சுமார் ரூ. 65,000) உதவி சென்னைக்கும் ஒதுக்கப்படும். மொத்த உதவியில் 70 சதவிகிதத்தை அமெரிக்கா ஏற்கு மாம்.

கைத்தறி நெசவுக்கு மாதிரிகள் அமைக்

சென்னையில் ...

...ருச்சி, ஜூலை 12—

...த்தறி நெசவுக்கு மாதிரிகள் அமைத்துத் தருவதற்கான நிறுவனம் ஒன்றை சென்னையிலும், துணை நிறுவனம் ஒன்றை காஞ்சீபுரத்திலும் நிறுவ அகில இந்திய கைத்தறி போர்டு முடிவு செய்திருக்கிறதாம்.

இந்தியாவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள மூன்றில் ஒன்றுதான் சென்னையில் நிறுவப்படுவது என்றும், மற்றவை இரண்டும் பம்பாய், காசி ஆகிய இடங்களில் நிறுவப்படும் என்றும் தெரியவருகிறது.

பட்டு நெசவுத் தொழில்

நாட்டின் தேவையை ஈடுசெய்ய கச்சாப் பட்டு இறக்குமதி

நாட்டின் பட்டு நெசவுத் தொழிலின் தேவையை ஈடுசெய்வதற்காக, மத்திய 'பட்டு சுழகம்' ஜப்பான், சீனா ஆகிய நாடுகளின் கச்சாப்பட்டு வகைகளை இறக்குமதி செய்திருக்கிறது. இவை, சென்னை — பம்பாய் — கல்கத்தா ஆகிய இடங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன; தேவையுள்ள பகுதிகளுக்கு இவை விநியோகிக்கப்படும்.

மேலும் ஒரு அமெரிக்க அணுகுண்டு சோதனை?

ஜப்பான் வானிலை ஆராய்ச்சியாளர் கண்டுபிடிப்பு !

டோக்கியோ, ஜூலை 12—

பிக்கினி தீவுகளில் மேலும் ஒரு அணுகுண்டு வெடிக்கப்பட்டிருக்க வேண்டும் என இங்குள்ள வானிலை ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்

நாடு முழுவதிலுமுள்ள வானிலை ஆராய்ச்சி நிலையங்கள், வானநிலையில் அதிர்ச்சிகள் காணப்பட்டதாக அறிந்துள்ளன என்றும், சில இடங்களில் இதுவரை ஏற்பட்டிராத காற்று அழுத்தம் கணக்கிடப்பட்டிருக்கிறது என்றும், இது பிக்கினித் தீவுகளில் எட்டாவது முறையாக அணுகுண்டு ஒன்றை அமெரிக்கா வெடித்திருப்பதினாலேயே நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர் கூறியிருக்கின்றனர்.

விலகல் !

'கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கைகள் பிடிக்காத காரணத்தால் கட்சியின் திருமங்கலம் நகர கமிட்டியில் வகித்து வந்த செயற் குழு உறுப்பினர் பதவியிலிருந்தும், சாதாரண உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகிக் கொண்டேன்' என்று தோழர் எம். நாகப்பன் அறிவிக்கிறார். (ந. - நி.)

மும்முனைப் போராட்ட நினைவு நாள் பொதுக்கூட்டங்கள்!

★

சென்னை — சேப்பாக்கம் :

15—7—56 மாலை 6-மணிக்கு டாக்டர் சி. நடேசன் நகர் (சேப்பாக்கம்) தோழமைக் கழகச் சார்பில், பார்த்தசாரதிநாயுடு தெருவில், தோழர் எல். கோபால் தலைமையில், தோழர்கள் மு. கருணாநிதி, இளம்பரிதி, டி. வி. நாராயணசாமி, தோழியர் அமுதா ஆகியோர் பேசுவர்.

★

மதுரை :

திலகர் சதுக்கத்தில்

15—7—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

காஞ்சி-கல்யாணசுந்தரம்

எஸ். முத்து

கே. எஸ். சந்தானம்

வசனபித்தன்

குறிப்பு :—அன்று மாலை 5-மணிக்கு, நாடார் வித்தியாசாலைத் தெரு, தாளமுத்து — நடராசன் படிப்பகத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, திலகர் சதுக்கத்தில் முடிவடையும்.

★

குடந்தை :

மோதிலால் தெருவில்

15—7—56 மாலை 6 மணிக்கு

பேசுபவர் :

கி. மனோகரன்

★

மாயூரம் :

15—7—56 மாலை 3-மணிக்கு, நகர தி. மு. கழகச் சார்பில், திரு. வி. எம். முத்து அவர்கள் தலைமையில், சின்ன கடைத் தெரு நடராசன் நினைவு வாசகசாலையிலிருந்து ஓர் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்படும்; நகரின் முக்கிய இடங்களில் கழகக் கொடி ஏற்றுவிக்கப்படும்; தி. மு. க. மாணவர் கிளை—ஆசிரியர் வேலாயுத மன்றம்—நடராசன் நினைவு வாசகசாலை—திரு. வி. க. படிப்பகம்—தில்லையாடி வள்ளியம்மைப் படிப்பகம்—செல்விக்குப்பம் மஜீத் மன்றம் ஆகிய நிறுவனங்கள் ஊர்வலத்தில் கலந்து கொள்ளும்.

★

சேலம் :

'வி' மார்க்கெட்டில்

15-7-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர் :

வி. சிவப்பிரகாசம்

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

ஈ. ஆர். கிருஷ்ணன்

சிற்றுளி-சுப்பிரமணியம்

★

திருப்புத்தூர் :

(இரா. மாவட்டம்)

தேரடி (அண்ணா) திடல்

15—7—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

எஸ். எஸ். தென்னரசு

பேசுவோர் :

கண்ணதாசன்

ப. உ. சண்முகம்

★

வேலப்பாடி (வேலூர்) :

பாரக்ஸ் மைதானத்தில்

(முனிசிபல் ஆபீஸ் எதிரில்)

15—7—56 மாலை 6-மணிக்கு

தலைவர் :

எம். கோபால்

பேசுவோர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

எ. எல். சி. கிருஷ்ணசாமி

இளஞ்செழியன்

பாண்டியன்

கோவை :

சிதம்பரம் பூங்கா

16—7—56 மாலை 6 மணிக்கு

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

★

மீஞ்சூர் :

15—7—56 மாலை 6-மணிக்கு

பேசுவோர் :

சத்தியவாணிமுத்து

வி. எஸ். கோவிந்தராசன்

என். வி. தங்கசாமி

பி. எஸ். தேவதாஸ்

★

வேட்டவலம் ரோட் :

15—7—56 மாலை 6-மணிக்கு

தலைவர் :

முருகேச உடையார்

பேசுவோர் :

ப. உ. சண்முகம்

து. சுப்பிரமணியன்

சாரங்கபாணி

★

திமிரி :

தேரடி மைதானத்தில்

15—7—56 மாலை 6 மணிக்கு

பேசுபவர் :

க. அன்பழகன்

★

கல்லக்குடி :

தி. மு கழக 3-வது ஆண்டு விழா

16—7—56 மாலை 6-மணிக்கு

தலைவர் :

அ. தம்புசாமி

பேசுவோர் :

மு. கருணாநிதி

அம்பில்-தர்மலிங்கம்

எம். எஸ். மணி

செங்குட்டுவன்

தோழர் ஆச்சிமுத்து இயக்கப் பாடல்கள் பாடுவார்.

குறிப்பு :—அன்று இரவு தோழர் மு. கருணாநிதி தலைமையில், கழக நிதிக்காக இயல்—இசை—நாடக மன்றத்தார் நடிக்கும் 'அமரவிசயம்' எனும் நாடகம் நடைபெறும்.

வடசென்னை குறள் நெறிக் கழகம்

14—7—56 மாலை 6-30 மணியளவில், கழக அறையில், (எண் 59, மன்னார்சாமி கோயில் தெரு), மு. பெருமாள் தலைமையில், 'நம் நாடு' எனும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

தூளை நகர இளைஞர் கழகம்

14—7—56 மாலை 6½ மணிக்கு, தோழர் என். சிவரத்தினம், 'மீனவர் நிலை' என்பது பற்றிப் பேசுவார்.

* * *

15—7—56 காலை 9 மணிக்கு, கல்யாணமேஸ்திரி தோட்டம், குமாரசாமிராசபுரம் ஆகிய இடங்களில் திரு. கே. வாசுதேவன் தலைமையில் இலவச பால் வினியோகமும், சுகாதாரப் பிரசாரமும் நடைபெறும். திரு. அ. ராமமூர்த்தி பேசுவார்.

சென்னைக் கல்விச் சங்கம்

15—7—56 மாலை 5 மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில் 'இம்மைச் செல்வம்' எனும் பொருள் பற்றி திரு. த. வே. முருகேசனார் தலைமையில், திருவாளர்கள் வ. சுப்பிரமணியம், க. வீ. வரதன் சொற்பொழிவாற்றுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

15—7—56 மாலை 6 மணியளவில், செங்கற்பட்டு தி. மு. கழகப் பணிமனையில், தோழர் ஏ. பலராமன் தலைமையில், 'வள்ளுவரும் குறளும்' எனும் பொருள் பற்றி தோழர்கள் சி பி வேணு, செ. ந பொன்னுசாமி, ஜி கனகசபாபதி ஆகியோர் பேசுவர்.

மு. கருணாநிதி கல்லக்குடி வருகை

16—7—56 மாலை 6 மணியளவில், கல்லக்குடி தி. மு. கழகச் சார்பில், தோழர் அ. தம்புசாமி தலைமையில் நடைபெறும் கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர் மு. கருணாநிதி அவர்கள் 'சூலை 15' என்பது பற்றிப் பேசுவார்.

சேலம் 14-வது வட்ட தி. மு. கழகத் துவக்கவிழா

15—7—56 காலை 9 மணியளவில், கிச்சிபாளையத் தெருவில் (சேலம் டவுன் பஸ் நிலையத்திற்கு அருகில்) சேலம் 14-வது வட்ட தி. மு. கழகத் துவக்க விழா தோழர் எஸ். ஏ அன்புக்கரசு தலைமையில் நடைபெறும் தோழர்கள் ஈ. வெ கி சம்பத், ஈ. ஆர். கிருட்டிணன், சிற்றுளி-ஏ சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மதுரை தாளமுத்து—நடராசன் நினைவுப்படிப்பக 11-வது ஆண்டு விழா

15—7—56 காலை 9 மணிக்கு, மதுரை, தெற்குவாசல் நாடார் வித்தியாசாலைத் தெருவில், மேற்படி ஆண்டுவிழா, மதுரை மாவட்ட தி. மு க. செயலாளர் தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெறும். தோழர் என். எஸ் இராசா கொடியேற்றி வைப்பார் ; தோழர் காஞ்சி—கல்யாணசுந்தரம் பேசுவார்.

வில்வம்—அருண்மொழி திருமணம்

14—7—56 மாலை 5 மணியளவில், சென்னை அரண்மனைக்காரத் தெரு, கோகலே மண்டபத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில், 'முரசொலி' துணை ஆசிரியர் தோழர் ஏ. கே. வில்வம்—தோழியர் அருண்மொழி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

14—7—56 இரவு 7-மணிக்கு மேற்படி மன்றச் சார்பில், திரு வேங்கட நாய்க்கன் தெரு எண்-8 இல்லத்தில், திரு. அ ஞானசுந்தரம், குறளில் 'நீத்தார் பெருமை' பற்றிப் பேசுவார்.

* * *

15-7-56 காலை 9-30 மணிக்கு பனைமரத் தொட்டி, சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில், ஓர் சொற்போர்கூட்டம் திரு ம. இராசமாணிக்கம் தலைமையில் நடைபெறும். 'கல்லூரிப் படிப்பு தேவையா?' என்ற பொருள்பற்றி தோழியர்கள் எஸ். கல்யாணி, ஜி பி. அமுதா (இலங்கை) ஒட்டியும், திரு மு செ. சிவப்பிரகாசம், திரு பொன்னுரங்கம் வெட்டியும் சொற்போர் நடத்துவர்.

இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

சூலை 15 : கோவை

16 : ஆலங்குடி (திருச்சி)

17 : வடுவூர் (தஞ்சை)

18 : திருக்களாச்சேரி

திருமணங்கள்

15—7—55 காலை 9 மணியளவில், சென்னை—தொண்டையார் நகர், பி. பி. அம்மன் கோயில் தெரு, எண் 59 இல்லத்தில், தோழர் கே. ஆர். தானியேல் தலைமையில், தோழர் ஏ. அண்ணாமலை—தோழியர் கிருட்டிணவேணி திருமணம் நடைபெறும். தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் வே கபிலன், கே எஸ். ராசு வாழ்த்துரை வழங்குவர்.

* * *

15—7—56 காலை 9 மணியளவில், சென்னை-மயிலாப்பூர், தெற்கு மாடவீதி, எண். 6 இல்லத்தில், தோழர் ஆர் கே. குருசாமி தலைமையில், தோழர் வெற்றிவேல்—தோழியர் வெள்ளையம்மாள் திருமணம் நடைபெறும் ; தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி வாழ்த்துரை வழங்குவார்.

* * *

15—6—56 காலை 9 மணியளவில், கல்லக்குடியில், தோழர் - அம்பில் - தர்மலிங்கம் தலைமையில், தோழர் மாணிக்கம்—தோழியர் சகுந்தலா வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும் தோழர்கள் ஏ தம்புசாமி, எம். எஸ் மணி, புலவர் குழந்தையா, புலவர் அரங்கசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

15—7—56 காலை 7 மணியளவில், திமிரியில், தி. மு க செயலாளர் தோழர் இரா. அரங்கராசன்—தோழியர் இலட்சுமி திருமணம், பேராசிரியர் க. அன்பழகன் தலைமையில் நடைபெறும்.

* * *

15—7—56 காலை 8 மணியளவில், குடியாத்தம் தாலுகா உண்ணாமலை சமுத்திரம் கிராமத்தில், தோழர் சங்கரசண்முகம் தலைமையில், தோழர் ரா. ரேணு—தோழியர் பட்டம்மாள் திருமணம் நடைபெறும் தோழர்கள் போளூர் நே. சுப்பிரமணியம், அ கருத்தோவியன், முனியப்பன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

ஈ. வெ. கி. சம்பத் விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு அவர் கூறி இன்னும் ஓராண்டுகூட முடியவில்லை; அதற்குள் இப்போது தூத்துக்குடியில் மீண்டும் பேசியிருக்கிறார் — 'தொழில் அபிவிருத்தியில் தென்னாடு பின்தங்கிக் கிடக்கிறது என்பது வெறும் பிரச்சாரத்திற்காக எழுப்பப்படும் கோஷமல்ல ; ஒரு உறுதியான உண்மையாகும், அது,' என்று !

"அவர் மேலும், டில்லி நிதி மந்திரி ஒரு புள்ளி விவரத்தைக் குறிப்பிட்டதாகக் கூறியிருக்கிறார்- 'இந்தியா முழுவதிலும் தொழில் [illegible] நத்திக்காக, சராசரியாய் நபா [illegible]க்கு ரூ. 27 செலவிடப்படுகிறது; [illegible] சென்னைக்கு ரூ. 18-தான் செல[illegible]றது; பம்பாய்க்கு ரூ. 135; வ[illegible] ரூ. 162 என்று செலவிட[illegible] து'—என்றும் விபரம் கூறியிருக்கிறார்.

"ஏற்கனவே தொழில் துறையில் முன்னேறியிருக்கும் வடநாட்டில், சராசரி அளவைப்போல 5 மடங்கு ஆறு மடங்கு செலவிடப்படும்போது, ஏற்கனவே மிகப் பின் தங்கிக் கிடக்கும் தென்னாட்டிற்கு, சராசரி அளவைவிட மிகக் குறைவான தொகையே செலவிடப்படுகிறது; ஏன் இந்தப் பாரபட்சம் ?

"நாம் இதை எடுத்துக்கூறிய நேரத்தில் 'விஷமிகள்', 'விபரமறியாதவர்கள்' என்று நம்மைக் குறித்துப் பேசியோர் இப்போது தங்களுக்கும் இந்த விஷயத்தில் ஞானமுண்டு என்று காட்டிக்கொள்வதற்காக, உண்மையைப் பேசுகிறார்கள்; அதற்காகவேனும் நாம் மகிழத்தான் வேண்டும்.

"சென்னை நிதி மந்திரி மேலும் சொல்லியிருக்கிறார் — 'எல்லோருமாகச் சேர்ந்து தென்னாட்டிற்கு அதிகத் தொகை செலவிடுமாறு டில்லியைக் கோரவேண்டும் — வற்புறுத்த வேண்டும்; சும்மா கூச்சல் போட்டால் போதாது' — என்று !

"அவருக்கு என்ன வியாகூலமோ, வேதனையோ — இப்படி எல்லாம் பேசுகிறார்! பதவிக்கு என்ன அபாயம் வந்திருக்கிறதோ?

'இப்படி டில்லி செய்துவரும் அநீதிகளை நாம் தொகுத்து எடுத்துச் சொல்லி வருகிறோம்.

"தொழில்கள் அத்தனையும் வடநாட்டில்தான் நிறுவப்பட்டிருக்கின்றன என்பதை நாம் பல முறை விளக்கியிருக்கிறோம்.

"'சேலத்தில் இரும்புக் கனிகள் கிடைக்கின்றனவே! அவற்றிற்கு விமோசனம் இல்லையா? தமிழ் மக்களுக்கு அவை பயன்பட வழியே இல்லையா?'—என்று, 30 - ஆண்டுகளாக எடுத்துக் கூறப்பட்டு வருகிறது.

"தி. மு. கழகம் தோன்றிய எட்டாண்டுக் காலமாக நாம் குரல் கொடுத்து வந்திருக்கிறோம்.

"அப்போதெல்லாம் சுப்பிரமணியமும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியும் கேலிச்சிரிப்பு போட்டுச் சிரித்தார்கள்; 'சேலத்திலாவது [illegible] கனிகளாவது? இவை [illegible] வெள்ளைக்காரன், இந்த நாட்டு ம[illegible] வேற்றுமை மனப்பான்மை—த[illegible]தை வளர்ப்பதற்காக எழுதிவைத்து விட்டுப் போன குறிப்புகளாகும்; அவற்றை வைத்துக்கொண்டு இந்தத் தி. மு. கழகத்தார் மாரடித்துக் கொண்டிருக்கிறார்கள்'— என்று கேலி பேசினார்கள்!

"ஆனால், இன்று நிலைமை என்ன? பேசியிருக்கிறார், டி டி. கிருஷ்ணமாச்சாரி — 'சேலத்து இரும்புக் கனிகளைப் பயன்படுத்தித் தொழிற்சாலை அமைக்க முடியும் என்ற நம்பிக்கையை நிபுணர்கள் ஊட்டியிருப்பது கண்டு சந்தோஷப்படுகிறேன்—என்று!

"திடீரென இவருக்குச் சந்தோஷம் வருகிறது; ஏதோ, நேற்று முன்தினம் இரவு தூங்கும் போது, ஸ்ரீமந்நாராயணன், இலட்சுமியின் தோளில் சாற்றியிருந்த கையை எடுத்து விழித்தெழுந்து 'பக்தா! சேலம் இரும்பு பயன்படும்' என்று கூறியதைப் போலவும், அதைக் கேட்டவுடன், மக்களிடத்தில் வந்து சந்தோஷம் தெரிவிப்பது போலவுமல்லவா பேசுகிறார்?

"சேலத்தில் இரும்பு கிடைக்கிறது என்று மட்டுமல்ல—அந்த இரும்பு, இந்தியாவில் கிடைப்பதில் எல்லாம் 'தர'மானது என்றுதான், ஜெர்மன்—அமெரிக்க நிபுணர்கள் கூறிச் சென்றிருக்கின்றனர்.

"இதெல்லாம் தெரியாமல், இது நாள் வரை, 'சேலத்திலாவது இரும்பாவது ?'—என்று கிருஷ்ணமாச்சாரிகள் பேசினர் என்றால், இல்லை; தெரிந்துதான் பேசினர். தெரியாத்தனத்தினால் அல்ல,' என்றுதான் கூறவேண்டும்.

"டில்லியில் உள்ள வஞ்சகர்கள்—சதிகாரர்கள், தென்னாட்டைச் சுடுகாடாக்கத் திட்டமிட்டார்கள்; அதனால்தான் அப்படிப் பேசினார்கள்!

"நெய்வேலியில் நிலக்கரி தோண்டும் விவகாரமும் அப்படித்தானே, இதுநாள் வரை காலந் தாழ்த்தப்பட்டு வருகிறது?

"சேலத்தில் கிடைக்கும் பாக்சைட்டைக் கொண்டு அலுமினியம் [illegible]லை துவங்கலாம் என்று எப்போம[illegible]து; இதுநாள்வரை நடந்து வருவதென்ன?

"வேண்டுமென்றே தமிழ் நாட்டை அழுத்திவைத்துத் தலைதூக்காமல் செய்தால், வடநாட்டைப் பொருளாதாரத் துறையில் அபரிமிதமாக வளர்த்துவிடலாம்; பின்னர், என்னதான் தொழில் வளர்ச்சி ஏற்பட்டாலும், பொருளாதாரத் துறையில் தென்னாடு வடநாட்டிற்கு அடிமைப்பட்டே ஆகவேண்டும்; அப்படிப் பொருளாதார அடிமைத்தனம் நிலைத்து விட்டால், அரசியல் அடிமைத்தனத்தை சுலபமாக நிலைநிறுத்தி விடலாம் — என்பதுதான், வடநாட்டவரின் இந்தப் பாரபட்சங்களுக்குக் காரணம்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.